7th December 1961]

SRI M. K. MARIAPPAN : கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தில் தலையாரி, வெட்டியான் இவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? இல்லையென்றால் அவர்கள் தங்களுக்குள் ஒரு சங்கத்தை அமைத்துக்கொண்டால் அதற்கு சர்க்கார் அங்கீகாரம் அளிப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : வில்லேஜ் சர்வெண்ட்ஸ் என்ற காடிகரியில் அவர்களும் வருகிறார்கள்.

Deaths due to rat-poisoning

*2145 *Q.*—**SRI S. M. ANNAMALAI :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம்மா நிலத்தில் 1961-ம் ஆண்டில் இதுவரை எத்தனை பேர்கள் எலிபாஷாணம், மூட்டைப்பூச்சி மருந்து தின்றதினால் இறந்துள்ளனர்?

THE HON. SRI M. A. MANICKAVELU : No information is available, as deaths due to these causes are not separately registered.

SRI S. M. ANNAMALAI : அடிக்கடி பத்திரிகையில் மூட்டைப் பூச்சி மருந்தை உண்டு பலர் மரிப்பதாகச் செய்திகள் வருகின்றனவே. இந்தத் தற்கொலைகளைத் தடுக்க மூட்டைப் பூச்சி மருந்து விற்பனையைக் கட்டுப்படுத்த சர்க்கார் முன்வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மருந்து வழங்குவதில் கடுமையான ஏற்பாடு இருக்கிறது. அதோடு இந்த உலகத்தைவிட்டு மேல் உலகத்திற்குப் போக வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டவர்களை எப்படிப் பாதுகாப்பது? கூடிய வரையில் பாதுகாக்கிறோம்.

Karugamputhur Panchayat Board

*2146 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, வேலூர் தாலூகா கருகம்புத்தூர் பஞ்சாயத்து போர்டு தலைவர்பேரில் மேற்படி பஞ்சாயத்து போர்டு அங்கத்தினர்கள் புகார் லெட்டர் வந்ததா?

(இ) என்னென்ன புகார், என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(உ) இல்லையென்றால், அதற்கான காரணமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, Sir. Several petitions have been received by the Collector of North Arcot.